மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மருத்துவர்களுக்கு தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளில் கடன் கொடுக்கிறார்கள். ஏன் கொடுக்க வில்லையென்ற விவரம் எனக்குத் தெரியாது. பாராளுமன்றத் தில்தான் கேட்க வேண்டும்.

டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலை.

571—(*வினா எண் 11334) **டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலையில் வெளி வரும் புகையினால் நுரையீரல் புற்றுநோய் அதிகரிப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற் சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் நுரையீரல் புற்று நோய் அதிகரிப்பதாக புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) எழவில்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள சிமெண்ட் தொழிற்சாலை களிலிருந்து வெளிவரும் கரும்புகை தூசிகள் வெளியேற்றத்தைத் தடுத்து சுத்திகரிக்க அனைத்துத் தொழிற்சாலைகளையும் நவீன மயமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழ்நாடு முழுவதற்கும் இருக்கிற பொதுப் பிரச்சினையாகும். ஏன், இந்தியா முழுவதற்கும் என்றுகூடச் சொல்லலாம். சிமென்ட் ஆலைகளிலிருந்து வெளி வருகின்ற புகையினால் பாதிக்கப்படுகிறார்கள் மக்கள் என்பது உண்மை தான். வெளியேறுகிற புகையைச் சுத்திகரிப்பதற்கு நவீன சுத்தி கரிப்பு ஆலைகள் வைக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். புதிதாகத் துவங்குகின்ற ஆலைகளுக்கு அந்தச்

1987 மே 4]

சுத்திகரிப்பு ஆலை வைத்தால்தான் அனுமதி வழங்கப்படும் என்ற விதியை வைத்திருக்கிறோம். ஏற்கனவே இருக்கிற ஆலைகள், புதிதாக வைக்கவேண்டுமென்று வற்புறுத்தலாமே தவிர, வேறுவழியில்லை. மீறுகின்றவர்கள்மீது வழக்குதான் தொடர முடியும் அதை அரசு தொடுத்துக் கொண்டு வருகிறது.

கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர், மதுக்கரையில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி.

572—(*வினா எண். 11696) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர், மதுக்கரையில் பிற்படுத்தப்பட்டோர்களுக்கான மாணவர் விடுதி ஒன்றினைத் தொடங்கிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமங்கலம் அரசினர் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லம்.

573—(*வினா எண் 12424) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலத்தில் உள்ள அரசினர் மாணவர் பிற்படுத்தப்பட்டோர் இல்லத்தில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி குறிப்பாக, திருமங்கலம் பொருளாதார ரீதியிலே மிகவும் பிற்பட்ட பகுதி என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே அறிவார்கள். இந்தத்